தலைப்பு : பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. மத்தேயு 6:9
நிகழ்ச்சி நிரல்/ ஜெபிக்க வேண்டிய பகுதி:

**ஆரம்ப ஜெபம்:**

- நம்முடைய தேசத்திற்காக ஜெபிக்கும் எல்லா கிறிஸ்தவர்களும் ஜெபத்தில் கலந்து கெள்ளவதினால் நம்முடைய பிதாவாகிய தேவன் மகிமைப்படுவராக
- இந்த சவாலான நேரத்தில் நமக்காக கிறிஸ்து இயேசுவுக்குள் தேவனுடைய அன்பு, ஒற்றுமையின் காரணத்தினால் மற்றும் ஒருவரில் ஒருவர் மேல் அன்பின் நிமித்தமாக எங்கும் அறியப்பட.

**ஆராதனை மற்றும் நன்றிசெலுத்துதல்**

- நம்மை முந்தி நித்திரை அடைந்தவர்கள், தங்களுடைய ஜீவனை தியாகம் செய்து, நம்முடைய தேசத்திற்கு சுவிசேஷத்தை பிரசங்கித்து, வேதத்தை மொழி பெயர்த்து, வளங்களை கொண்டு வந்ததால் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.
- அவர் தேசத்தின் முழுவதும் அரசாளுகிறார் மற்றும் மலேசியா முழுவதும் அரசளுவார் என்று தேவனை ஸ்தோத்தரிக்கிறோம்.
- அவர் தீய சூழ்நிலைகளிலிருந்து நல்லதைக் கொண்டு வருகிறார் என்று தேவனுக்கு நன்றி செலுத்துங்கள். அல்லா விவகாரத்தில், சபைகள் ஒன்று சேர்ந்தது – தேவன் பொறுப்பாளராக இருக்கிறார்.

**பரிந்துரைக்கப்பட்ட வாசிப்பு & பிரதிபலிப்பு** – <u>மத்தேயு 6:9-15</u>
நம்முடைய பரலோகத்தின் பிதா, அவர் தன்னுடைய பிள்ளைகளுக்கு சிறந்ததை மட்டுமே விரும்புகிறார் என்று தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.

- அவருடைய பிள்ளைகளாகிய நாம், நம்முடைய பிதாவின் காரியத்தைக் குறித்து அக்கறை உள்ளவர்களாக இருந்து, அவருடைய இராஜ்யத்தை வரப்பண்ணி மற்றும் அவருடைய சித்தம் நடைபெற.
- நாம் அவருடன் பரலோகத்தில் நம்முடைய புதிய வீட்டிற்கு ஆயத்தமாக்க அவர் நம்மை சுத்திகரிக்க விரும்புகிறார். அவர் பரிசுத்தமாக இருப்பதால், நாம் பரிசுத்தமாக இருக்க வேண்டும்.

**அறிக்கை மற்றும் மனந்திரும்புதல்**
அவை:

- நாம் பரிசுத்த வாழ்வில் வாழ்ந்திருக்கவில்லை, பாவத்தை சர்வ சாதாரணமாக எண்ணுகிறோம்.
- நாம் நம்முடைய ஆதி அன்பை இழந்து விட்டோம்
- பூமியில் நம் சொந்த இராஜ்யங்களை கட்டியெழுப்ப நமக்கு மிகவும் சொகுசாக இருக்கிறப்படினால் இத்தேசத்தின் அசைவை பார்த்து அஞ்சுகிறோம்.
- நம்முடைய அண்டை வீட்டாரோடும், நம்முடைய தேசத்தின் மேலும் நமக்கு அன்பு குறைவாக இருக்கிறது (பல இன மக்கள் உள்ள மற்ற இனங்களையும் மதங்களையும்) ஜெபிக்கிறதற்கு பதிலாக நாம் குறை சொல்கிறோம்.
- பிதாவின் வேலையை செய்ய மறந்துவிட்டோம். சென்று! சகல ஜாதிகளையும் சீஷராக்க. என்ற கர்த்தராகிய இயேசுவின் பரிசுத்த கட்டளையை நிறைவேற்ற தோல்வி அடைந்து விட்டோம்.
- சபையாகிய நாம் ஒரு எடுத்துக்காட்டு காட்டவில்லை, ஒற்றுமை மற்றும் ஒருவருக்கொருவர் அன்பில் குறைந்து, அதிக நேரத்தை சண்டையில் செலவு செய்கிறோம்.

**பரிந்துபேசுதல்**

a. <u>சபை</u>
    - பரிசுத்தமாக இருக்க வேண்டும்,
    - குரல் அற்றவர்களுக்கு குரல்கொடுக்க, நியாயத்திற்கும் நீதிக்கும் நிற்க,

- தைரியமாக, தேவனுக்கு பயந்து மனிதனுக்கு அல்ல,
- ஒருவருக்கொருவர் அன்பு கூறவும் மற்றும் ஐக்கியப்பட வேண்டும்,
- காணமால் போனவர்களுக்கு, குறிப்பாக பெருபான்மை இனத்திற்கு மனதுருக்கம் காட்டுங்கள்.
- தற்போதைய தலைமுறையின் தலைவர்கள் தைரியமாக இருக்கவும், ஞானமாகவும் மற்றும் புயலைத் தாங்கிக்கொண்டு தேசிய சபைகளை வழிநடத்த.
- ஏதிர்கால தலைவர்கள் எழுப்பப்படுவதற்கும், ஆவியால் நிரப்பப்பட்டு, ஞானமுள்ளவர் மற்றும் பரிசுத்தம், கிருபையும் சத்தியமும் நிறைந்தவர்களாக இருக்க.
- இந்த பெந்தேகொஸ்தில் பரிசுத்த ஆவியானவர் எல்லா சபையின் மேல் ஊற்றப்பட்டு மற்றும் மேலுள்ளவைகள் செய்ய இன்னும் பெலப்படுத்த.

b. <u>பூமிபுத்ரா சபை</u>

- வலுவான தலைவர்கள் எழுப்பப்பட ஜெபிக்கவும் -பரிசுத்தம், ஞானம் மற்றும் சபையை நடத்த நல்ல ஆட்கள்.
- நல்ல வளங்களுக்காக ஜெபிக்கவும்.
- ஓநாய்களால் அச்சுறுத்தலுக்கு ஆளாகியிருக்கும் ஆடுகளை மேய்ப்பதற்கு அதிகமான மேயப்பர்கள் பயிற்றுவிக்கப்பட ஜெபிக்கவும்.
- வாலிபர்கள் தனிப்பட்ட முறையில் தேவனை அறிந்துகொள்ள ஜெபிக்கவும்.

c. <u>மலேசியா</u>

- எம்எச் 370, எம்எச் 17, கியுஇசட் 8501, ஹெலிகாப்டர் விபத்துக்கள் (2), கேஎல்ஐஏ2 வட கொரிய நபர் படுகொலை, 1எம்டிபி – இந்நாடு அனைத்து தவறான காரணங்களுக்காக சர்வதேச முழுவதும் கவனத்தில் இருப்பது ஒரு எதிர்பாராத ஒரு சம்பவம் அல்ல. மலேசியா ஆவிக்குரிய புயல் கண்ணில் உள்ளது, நாம் பரிந்துபேச வேண்டும்.
- போதகர் ரேமண்ட் கோ மற்றும் காணாமல் போன மற்றவர்கள் - எல்லா கிறிஸ்தவர்களும் சிலுவையை சுமக்க தயாராக இருக்கவும், தைரியமாக சுவிசேஷத்தைப் பிரசங்கித்து மற்றும் நல்லதை செய்ய ஜெபிக்கவும். வீழ்த்தப்பட்ட ஒவ்வொரு ஆர் கே-வுக்காக இன்னும் 10 பேர் எழும்ப ஜெபிக்கவும், நீதியின் நிமித்தம் சிந்தப்பட்ட ஒவ்வொரு துளி இரத்தத்தின் காரணமாக தேவன் அதிகமான அறுவடையை கொண்டு வர.
- ஊழல் - மறைக்கப்பட்ட அனைத்தும் வெளியரங்கப்பட: எம்ஏசிசி தைரியமாக இருக்க மற்றும் குற்றவாளிகள் நீதிக்கு கொண்டு வர.
- பொது தேர்தல் 14 – அரசியல் கட்சியைப் பொருட்படுத்தாமல், நல்ல வேட்பாளர்களாக எழுப்பப்பட நீதியுள்ள நபர்களுக்காக ஜெபியுங்கள். தேசத்தின் ஒழுக்க நெறிகளை மீட்டெடுக்க வேண்டும். அரசியல் முதர்ச்சிக்காக ஜெபிக்கவும் - அரசியலில் இன மற்றும் மதத்தை சுயநலத்திற்காக பயன்படுத்தாத நல்ல நபர்களை எழுப்பப்பட.
- பொருளாதாரம்
    - பணத்தை ஞானமாக பயன்படுத்தவும், மக்களின் நலன்களுக்காக பொது கொள்கைகளுக்கு ஜெபிக்கவும்.
    - அறிவுடையார் வெளியேற்றத்தினால் மலேசியா போட்டி விளிம்பில் இழந்து போகமல் இருக்க. கிறிஸ்துவ வாலிப இளைஞர்கள் தொடர்ந்து சேவை செய்ய ஜெபியுங்கள்.
    - பலவீனமான ரிங்கட் மக்கள் மீது அநாவசியமான கஷ்டத்தை ஏற்படுத்தி & அவர்களை சதாதரணமாக சுரண்டப்படாமல் அவர்கள் கர்த்தரிடம் திரும்ப வேண்டும். (ஏசாயா 19:19-22) ராயட்டின் நீண்ட கால நன்மைக்காக, ஞானமுள்ள நீடிய நிதி கொள்கைகளுக்காகவும், தேவனுக்கு பயந்த அரசியலுக்காகவும் ஜெபிக்கவும்.
- பொது பணியாளர் - அதிகமான கிறிஸ்துவ ஆண்கள் மற்றும் பெண்கள் அதிகார நடைக்கூடத்தில் சேவை செய்ய ஜெபிக்கவும்.

d. <u>மனித கடத்தல் மற்றும் குடியேறியவர்கள்</u>

அமெரிக்காவின் மனித கடத்தல் அறிக்கைகளில் மலேசியா இரண்டாவது நிலையில் இருக்கிறதை குறித்து வெட்கமடைகிறது. குறிப்பாக போலீஸ், ரேளா மற்றும் குடியேற்றம் துறையின் மூலம் ஊழலுக்கு எதிராக இன்னும் பாதுகாக்கப்பட ஜெபிக்கவும். அவர்களது பிள்ளைகள் பள்ளிக்கூடம் செல்ல ஜெபிக்கவும். இந்த ஒடுக்கப்பட்ட மக்களின் நியாயத்திற்காக ஒரு குரல் எழுப்புவதோடு, பேசவும் சபை சமூக நீதி முன்னணியில் இருக்க ஜெபிக்கவும்.

e. <u>பகுதி</u>

- ஆசியான்: இது உருவாக்கத்தின் 50வது ஆண்டு விழா. வரவிருக்கம் யூபிலிக்காக ஜெபிக்கவும், 10 உறுப்பினர்களில் 6 உறுப்பினர்கள் கிறிஸ்தவர்களை அதிகமாக

தன்புறுத்தப்படுத்துகிற 50 நாடுகளின் பட்டியலிலே உள்ளது. மலேசியா சபை தேசங்களுக்கு 100 மிஷனரிகளை அனுப்பி, நம்முடைய அண்டை நாட்டின் நட்பை செழிப்பாக்க.

- ஆசியான் பாதுகாப்புக்காக ஜெபிக்கவும். இஸ்லாமிய தீவிரவாதிகள் 4 நாடுகளை புரூணை, இந்தோனேசியா, பில்ப்பைன்ஸ், தென் தாய்லாந்து மற்றும் மலேசியா ஆகிய நாடுகளை தங்கள் கலிப்பாவாக எடுத்துக்கொள்ள இருக்கிறார்கள், தீயவற்றை விரிவாக்கமால் எதிர்த்து ஜெபிக்கவும். ஹூடுட் சட்டத்தின் இரண்டாம் கட்ட அமர்வுகளை புரூணை எதிர்கொள்வதைக் குறித்து ஜெபிக்கவும் இச்சட்டத்தில் கைகளை வெட்டுவதும் மற்றும் பிரம்பில் அடிப்பதும் அடைங்கியிருக்கிறது.
- தீவிர மதச்சார்பின்மை, பன்மைவாதம், ஒன்று மற்றொன்றை சார்பான கொள்கை மற்றும் வன்முறை ஆகியவற்றின் எழுச்சி தேவனுக்கு எதிரான மனித முரட்டாட்டம் பெருகி கடைசி காலத்தை பிரதிபலிக்கிறது இந்த கடைசி நாட்களில் சபை எழுந்து, அப்போஸ்தல நாட்களை போல உண்மையாக அப்போஸ்தலர் மற்றும் தீர்க்கதரிசன கொள்கையுள்ளவர்களாக ஆயத்தமாகயிருக்க ஜெபிக்கவும்.
-

**<u>அர்ப்பணிப்பு</u>**

பரிசுத்த ஆவியானவர் நம்மை வழிநடத்தவும் மற்றும் உதவவும்:-

- நம்முடைய ஜெபங்கள் நம்மை செயல்படத் தூண்டு வைப்பதற்கு.
- உண்மையான சீஷனாக வாழ்வதற்கு, தினந்தோறும் நம்முடைய சிலுவையைச் சுமந்து இயேசுவை பின் தொடர, நற்செய்தியைப் பெற மற்றவர்களுக்காக நம் வாழ்வை இழக்க எப்போதும் தயாராக இருக்க.
- ஒவ்வொரு சபையும் தேசங்களுக்கு ஜெப வீடாகவும், மற்றும் ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் ஜெபிக்கிற வீரராகவும் ஆகுவதற்கு.
- தேசத்திற்கு 100 வேலையாட்களை திரட்டி, உலகத்திற்கு அனுப்பப்பட தயாராக இருக்க. *‘‘பாவத்தைத் தவிர வேறெதுவுக்கும் பயப்படாமல் மற்றும் தேவனைத் தவிர வோறொன்றையும் விரும்பாமல் நூறு பேரை எனக்கு கொடுங்கள், அவர்கள் விசுவாசியாக இருக்கலாம் அல்லது ஊழியராக இருக்கலாம். அவர்கள் மட்டுமே நரக வாசலை குலுக்கி பூமியிலே பரலோக இராஜ்யத்தை ஸ்தாபிப்பார்கள்’’. - ஜோன் வெஸ்லி*
- ஸ்தேவான் தலைமுறையை உயர்த்துவதற்கு [ அப்போஸ்தலர் 7]
- தைரியமாக சுவிசேஷத்தை பிரகடனம் செய்து, எல்லோரும் இயேசுவை அறிந்து, இரட்சிப்பை பெற்று கொண்டு, அவரின் அன்பின் பயனுள்ள சாட்சிகளாய் இருக்க.

**முடிவு ஜெபம் & விசுவாச அறிக்கை**

‘‘கர்த்தாவே உன் நாமத்தை கூப்பிடுகிற வேளையில், அறியாத எட்டாத பெரிய காரியங்களை அறிவியும்....(எரேமியா 33:3) உம்முடைய பரிசுத்த ஆவியை எங்கள் மேல் ஊற்றி உம்முடைய முகத்தை ஒரு மனதோடு தேசமெங்கிலும் தேடுகையில் எழுப்பதல் எங்கள் தேசத்தின் மேல் வரட்டும் கர்த்தாவே.

கர்த்தருடைய ஜெபத்தோடும் மற்றும் முடிவு பாடலோடும் நாங்கள் முடிவுக்கு கொண்டு வருகிறோம்.

**ஆசீர்வாதம்**